**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 175/2023**

**Dated :11.03.2026**

**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சகுந்தலா | வயது | : | 70 |
| கணவர் பெயர் | : | கருப்பையா | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | சொக்கநாதப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3எதிரிகள் ஆஜர்)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2023 ஆம் ஆண்டு, தேதி, மாதம் ஞாபகம் இல்லை, மதியம் சுமார் 12.00 மணியளவில், எனது கொல்லைக்கு சென்றேன். அப்போது 1ஆம் எதிரி ரமேஷ், என்னை பார்த்து தேவுடியா, குச்சிக்காரி மகளே என்று அசிங்கமாக பேசினார். கல்லால் எனது நெஞ்சில் அடித்தார். 3 ஆம் எதிரி தாமோதரன் கடப்பாறை எடுத்து வந்து, உன்னை குத்தி கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். 2ஆம் எதிரி ராஜ்மோகன் மண்வெட்டி எடுத்து வந்து, உன்னை குத்தி கொன்று விடுவேன் என்று மிரட்டினார். என் மகள்கள் சிவகாமி மற்றும் கண்ணகி ஆகியோர்கள் என்னை சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் அங்கு சிகிச்சையில் இருந்த போது, மறுநாள் போலிசார் வந்து விசாரித்தார்கள். நான் நடந்தததை சொன்னேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1)** சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 05.01.2023 என்றால் சரிதான். அது சம்மந்தமாக ஆதனக்கோட்டை காவல் நிலையம் சென்று, புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். யார் புகார் கொடுத்தது என்றால் நான் என் கணவர் மற்றும் எனது மகள் ஆகியோர் கொடுத்தோம். நாங்களும் எதிரிகளும் 2 ஏக்கர் நிலங்களை பரிவர்த்தனை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அது சம்மந்தமாக பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். அது சம்மந்தமாக புதுக்கோட்டையிலும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்திலும் வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் நான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வெளிக்காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான், நெஞ்சில் வலி இருந்தது.

2) எதிரிகள் என்னை கல்லால் தாக்கவில்லை என்றாலும் நாங்கள் தான் எதிரிகளை அசிங்கமாக பேசி, கல்லால் தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு, அவர்கள் கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி யாருக்கு தெரியும் என்று எனது புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை, நானும் எனது மகள், மருமகள் ஆகியோரும் இருந்தோம். எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.11 15:36:35 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 175/2023**

**Dated :11.03.2026**

**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW Examined as PW2 (Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அழகர்சாமி | வயது | : | 47 |
| தந்தை பெயர் | : | மகாலிங்கம் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | சொக்கநாதப்பட்டி | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3எதிரிகள் ஆஜர்)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1-ஐ எனக்கு தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>( சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால், நீதியின் பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) கடந்த 05.01.2023 ஆம் தேதி, நானும் ராமசாமி என்பவரும் மதியம் சுமார் 01.00 மணியளவில், அ.சா.1இன் கொல்லைக்கு அருகில் வேலை செய்து கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல, 1ஆம் எதிரியானவர் அ.சா.1-ஐ வழிமறித்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி, எதுக்குடி என் கொல்லைக்கு வருகிறாய் என்று பேசினார் என்றால் சரியல்ல. 1ஆம் எதிரி அருகில் கிடந்த கருங்கல்லை எடுத்து அ.சா.1இன் நெஞ்சில் வீசினார் என்றால் சரியல்ல. 2 ஆம் எதிரி

மண்வெட்டி கைப்பிடியை எடுத்து அ.சா.1 உன்னை பார்த்து கொல்லாமல்விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றால் சரியல்ல. 3 ஆம் எதிரி அ.சா.1 இன் சேலையை பிடித்து கீழே தள்ளினார் என்றால் சரியல்ல. அ.சா.1இன் சத்தம் கேட்டு, சிவகாமி மற்றும் மலர்விழி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து அ.சா.1 இன் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.11 15:36:55 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 175/2023**

**Dated :11.03.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW4 Examined as PW3 ( Mahazar Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவசாமி | வயது | : | 83 |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | சொக்கநாதப்பட்டி | தொழில் | : | வேலை எதுவும் செய்யவில்லை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>( சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால், நீதியின் பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 06.01.2023 ஆம் தேதி மதியம் 03.00 மணியளவில் நானும் கருப்பையா என்பவரும் கொல்லையில் வேலை முடித்து விட்டு, வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது, சம்பவ இடத்தில்

இருந்த ஆதனக்கோட்டை போலிசார் குற்ற எண் 3/2023 வழக்கில், எங்கள் முன்னிலையில், சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலிசாரிடம் வாக்குமூலம் அளித்தேன் என்றால் இல்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.11 15:37:09 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**